2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்)*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

திரு. வி.சி. சந்திரகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Now, the time is *11–14. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சருடைய பதிலுரை இருக்கின்றது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், எல்லாவற்றையும் நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை,* please sit down. *(குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. (குறுக்கீடுகள்)* Thiru V.C. Chandrakumar, I am not giving you the mike. *நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. (குறுக்கீடுகள்)* Please sit down. *நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. (குறுக்கீடுகள்) இல்லை. நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வி.சி. சந்திரகுமார், உட்காருங்கள், இன்றைக்கு நிறைய அலுவல்கள் இருக்கின்றன. எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், நீங்கள் என் அறையிலே வந்து* discuss *செய்யுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

முற்பகல் 11–15

3. தே.மு.தி.க. சட்டமன்றக் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட அறையில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்டமன்றப் பேரவை, சட்டமன்றப் பேரவைச் செயலகம், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் சட்டமன்றக் கட்சித் தலைவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அறைகள் இவையனைத்தும் பேரவைத் தலைவரின் ஆளுகைக்குட்பட்ட இடங்கள். இவற்றில், எந்தவொரு கட்சியும், இந்த இடம்தான்*

தங்களுக்குத் தர வேண்டும் என உரிமையாகக் கேட்க முடியாது. எதிர்க்கட்சித் தலைவராக இருந்தாலும் சரி, பிற சட்டமன்றக் கட்சித் தலைவர்களாக இருந்தாலும் சரி, பேரவைத் தலைவர் இட வசதிக்கு ஏற்ப, தனது உசிதப்படி ஒதுக்குகின்ற இடத்தைத்தான் பயன்படுத்த வேண்டும் என்பது மரபு.

ஒவ்வொரு கட்சியினுடைய உறுப்பினர்களின் எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொண்டும், இடவசதிக்கு உட்பட்டும் அறைகள் ஒதுக்கப்படுகின்றன. மேலும், தேவை ஏற்படுகின்ற நேர்வுகளில், புதிய இடவசதி ஏற்படுத்துவதோ அல்லது ஏற்கெனவே ஒரு கட்சிக்கென ஒதுக்கப்பட்ட அறையை மாற்றம் செய்வதோ அல்லது பிறிதொரு இடத்தை ஒதுக்குவதோ பேரவைத் தலைவரின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட ஒன்றாகும். பேரவைத் தலைவருடைய நடவடிக்கையை எந்தவிதத்திலும் உள்நோக்கம் கற்பித்து விமர்சிப்பதை அனுமதிக்க இயலாது. பேரவைத் தலைவரால் அவையில் உறுப்பினர்களுக்கு எவ்வாறு இடம் ஒதுக்கப்படுகிறதோ, அதேபோன்று சட்டமன்றக் கட்சித் தலைவர்களுக்கென அலுவலகமும் பேரவைத் தலைவரால் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, இட வசதிக்கு உட்பட்டு ஒதுக்கப்படுகிறதேயன்றி, வேறொன்றும் இல்லை. எனவே, இதனை உறுப்பினர்கள் தவறாகச் சித்தரித்து, அரசியல் உள்நோக்கத்துடன், பேரவை விதிகளுக்கு மாறாக, பேரவைத் தலைவரின் நடவடிக்கையை விமர்சிக்கும் வகையில் பேச வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒதுக்கப்பட்ட அறையில், அவருக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள எந்தவித வசதிகளும் குறைக்கப்படவில்லை என்பதையும் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நான் நீண்டதொரு விளக்கம் கொடுத்துவிட்டேன். (குறுக்கீடு) இது பேரவைத் தலைவருடைய அதிகார வரம்பிற்கு உட்பட்ட பொருள். இதை இங்கே விவாதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவருடைய அதிகார வரம்பினை குறித்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நல்ல விளக்கத்தினை இங்கே எடுத்துச்சொல்லி இருக்கின்றார்கள்.

சட்டமன்றக் கட்சித் தலைவர்களுக்கோ, எதிர்க்கட்சித் தலைவருக்கோ, சட்டமன்றக் கட்சிக்கோ அறைகளை இடமாற்றம் செய்யவோ, அறைகளை ஒதுக்கவோ பேரவைத் தலைவருக்கு முழு அதிகாரம் உண்டு. அங்கே ஏதோ அவர்களுக்கு இடத்தை பட்டா போட்டு கொடுத்ததைப்போலப் பேசுகிறார். அதில் தலையிட யாருக்குமே உரிமை கிடையாது. எனவே, அவர் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதியின்றி அவர் பேசுவது அவைக் குறிப்பிலே ஏறாது. (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்மாதிரியாக பல்வேறு நிகழ்ச்சிகள் இந்த அவையிலே நடந்திருக்கின்றன. 61 சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தபோதுகூட, 61 பேர்களுக்கும் இருக்கைகள் இருக்கின்ற அளவிற்கு இடங்கள் எப்பொழுதும் ஒதுக்கப்படவில்லை. பேரவைத் தலைவர், இருக்கின்ற இடத்திற்கேற்ப, எந்த எதிர்க்கட்சியாக இருந்தாலும் அதற்குத் தகுந்தாற்போல ஒதுக்குவதுதான் வழக்கம். ஆகவே, இதைப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு தே.மு.தி.க. நண்பர்கள் பேசுவது சரியாக இல்லை என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரேயொரு நிமிடம். திரு. அருண் சுப்பிரமணியம், உட்காருங்கள். இன்னுமொரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இன்னும் சொல்லப்போனால், எட்டாவது பேரவைக் காலத்தில் இதுபோன்ற ஒரு நேர்வில், இன்றைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அன்று அமைச்சராக இருந்தபோது, 3–6–1985 அன்று பேரவைத் தலைவரை நோக்கிப் பின்வருமாறு உரையாற்றியுள்ளார்கள். “சட்டமன்ற கட்சிகளுக்கு வசதிகளை ஏற்படுத்தித் தருகின்ற முழு உரிமையும் தங்களுடைய ஆளுகையின் எல்லைக்குட்பட்டது”— யாருடைய ஆளுகைக்குட்பட்டது? பேரவைத் தலைவரின் ஆளுகைக்குட்பட்டது—‘‘ஆகவே, எத்தனை உறுப்பினர்கள் ஒவ்வொரு கட்சியின் சார்பில் உட்கார்ந்திருக்கிறார்களோ அந்த

உறுப்பினர்களின் எண்ணிக்கைகளுக்கேற்ப இடத்தை ஒதுக்குவது உங்களின் ஆளுகைக்குட்பட்டது". ஆகவே, இப்போது இருக்கின்ற அறையில், உங்களுடைய அறைதான் பெரியது. அதனால், இதை இதோடு விட்டு விடுங்கள். *(குறுக்கீடு)*

முற்பகல் 11–20

குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன் அவர்கள். மாண்புமிகு மனுக்கள் குழுவின் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள். (குறுக்கீடு) மேலும் இதை விவாதப் பொருளாக்காதீர்கள். மேலும் விவரம் வேண்டுமானால் என் அறைக்கு வாருங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தீர்ப்பு வழங்கியதற்குப் பிறகு, இதை விவாதிப்பதற்கு யாருக்கும் உரிமையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறேன். அந்தத் தீர்ப்புக்குமேல் விவாதம் இல்லை. *(குறுக்கீடு)*

(தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு எதிர்க்கட்சியின் கொறடா திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள் சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பில் இருக்காது. *(குறுக்கீடு)* மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன். *(குறுக்கீடு)* ஏற்கெனவே நான் அவருக்கு மைக் கொடுக்கவில்லை. எனவே, அவர் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் இருக்காது. கடைசியாக அவர் பேசியதும் அவைக் குறிப்பில் இருக்காது. *(குறுக்கீடு)* மைக் அவருக்கு கொடுக்கப்படவில்லை.